இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பட்டப்பின் கல்வி டிப்ளோமா
இறுதிப் பரீட்சை 2004/2005 - இரண்டாம் அரையாண்டு
ESP 1205 – ஒப்பீட்டுக் கல்வியும் கல்விப் பிரச்சினைகளும்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 16.07.2006 நேரம்: மு.ப 9.30 - பி.ப 12.30

பகுதி இல் I உள்ள எல்லா வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. இலங்கையின் புராதனக் கல்வி முறையில் செல்வாக்குச் செலுத்திய மூன்று காரணிகளைத் தருக.

2. (i) ஒல்லாந்தரினால் கல்விக்கென அமைக்கப்பட்ட பிரதான நிருவாக அமைப்பின் பெயரைத் தருக

   (ii) அரசின் கல்விக்கான நேரடிப் பொறுப்பினை வெளிப்படுத்திய இவ் அமைப்பின் பிரதான இரண்டு கடமைகளைக் குறிப்பிடுக.

3. 1867இல் மோர்கன் குழுவினரால் முன்வைக்கப்பட்ட ஐந்து சிபாரிசுகளைக் குறிப்பிடுக.

4. கிராமப் புறங்களில் கல்வித்தரத்தை விரிவுபடுத்த 1940களில் அமைக்கப்பட்ட மத்திய பாடசாலைகளின் (மத்திய மகாவித்தியாலயங்கள் ) நான்கு அம்சங்களைச் சுருக்கமாக விபரிக்க.

5. இலங்கையில் 1998இல் ஆரம்பக்கல்வியில் அறிமுகப்படுத்தப்பட்ட கலைத்திட்டம் தொடர்பான ஐந்து சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.

6. தென்னாபிரிக்காவில் இனஒதுக்கு முறைக்கொள்கையை உறுதிப்படுத்திய சட்டவாக்க நடவடிக்கைகள் எவை?

7. 1944ஆம் ஆண்டு பட்லர் சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட மூன்று பிரதான சீர்திருத்தங்கள் எவை?

8. ஆரம்பக்கல்வியை விரிவாக்குவதில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் முகங்கொடுக்கும் நான்கு சவால்களைக் குறிப்பிடுக.

(5 x 8 = 40 புள்ளிகள் )

## பகுதி II

9. 'சகல ஆரம்பப் பாடசாலைகளிலும் தாய்மொழியே கற்பித்தல் ஊடகமாக இருக்க வேண்டும். ஆங்கிலம் கற்பித்தல் ஊடகமாக இல்லாவிடின் அதனை ஒரு மொழியாக அறிமுகப்படுத்த வேண்டும்'.

மேற்குறித்த சிபாரிசு 1943ஆம் ஆண்டு கல்விமீதான விசேடகுழுவினால் முன்வைக்கப்பட்டது.

(i) கல்விமீதான விசேடகுழுவினால் இச்சிபாரிசு ஏன் முன்வைக்கப்பட்ட தென்பதை விளக்குக. (8 புள்ளிகள்)

(ii) மேற்படி சிபாரிசு அமுலாக்கப்பட்டதன் மூலம் இலங்கைச் சமூகத்தில் ஏற்பட்ட செல்வாக்கினை ஆராய்க.
(12 புள்ளிகள்)

10. 'இலங்கையில் கனிஷ்ட இடைநிலை பாடசாலை மட்டத்தில் கொண்டுவரப்பட்ட 1972ஆம் ஆண்டுக் கலைத்திட்டச் சீர்திருத்தங்கள் மீண்டும் மீண்டும் எழும் கல்வி மற்றும் பொருளாதார பிரச்சினைகட்குத் தீர்வுகாணும் பிரதான உபாயமாகக் கருதப்படுகின்றன'.

(i) மேற்படி கலைத்திட்டச் சீர்திருத்தங்களின் குறிப்பிடத்தக்க புதிய அம்சங்களைச் சுருக்கமாக விபரிக்க.
(8 புள்ளிகள்)

(ii) கல்வி மற்றும் பொருளாதார பிரச்சினைகட்கு இச் சீர்திருத்தங்கள் எவ்வாறு தீர்வு காண உதவின என்பதை நுணுக்கமாக மதிப்பீடு செய்க.

(12 புள்ளிகள்)

11. கல்வியில்,

(i) நியாயத் தன்மை
(ii) பொருத்தப்பாடு

பிரச்சினைகள் தொடர்பாக ஐக்கிய இராச்சியம் மேற்கொண்ட நடவடிக்கைகளை விபரிக்க.
(10 x 2 = 20 புள்ளிகள் )

12. (i) அண்மைத் தசாப்தங்களில் கல்வி மீது சர்வதேசச் செல்வாக்கு வலுவடைந்தமைக்கான நான்கு காரணிகளை விளக்குக.
(8 புள்ளிகள்)

(ii) பலமிக்க இச் சர்வதேசச் செல்வாக்கினால் இலங்கையில் ஏற்பட்ட மூன்று அனுகூலங்களையும் மூன்று பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

(12 புள்ளிகள்)

13. (i) இலங்கையில் வேலையின்மைப் பிரச்சினைகட்கு நியமப் பாடசாலைக் கல்வி எத்துணை அளவிற்குப் பொறுப்பாக உள்ளதென்பதைப் பரிசீலிக்க.

(10 புள்ளிகள்)

(ii) நியமப் பாடசாலைக் கல்வியை வேலை உலகுடன் இணைப்பதற்கு நீங்கள் முன்வைக்கும் ஆலோசனைகள் எவை?

(10 புள்ளிகள்)

14. பின்வரும் இரண்டு தலைப்புகளில் சுருக்கக் குறிப்புகள் எழுதுக.

(i) தெற்காசிய பிராந்தியத்தில் கல்வியைப் பெறுவதில்(Access) உள்ள பிரச்சினை

(ii) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கல்வியில் குறைந்தளவான உள்ளகவினைத்திறனுக்கு இட்டுச் செல்லும் காரணிகள்.

(iii) ஐக்கிய அமெரிக்க நாடுகளில் இரு மொழிக் கல்வி.

(10 x 2 = 20 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)